உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

### மாதாந்தப் பத்திரிகை.


| | | |
|---|---|---|
| மலர் 8 | துந்துபிஹூ ஐப்பசி-கார்த்திகைமீ<br>1922ஹூ அக்டோபர்-நவம்பர்மீ | இதழ் 7-8 |


உள்ளுறை — பக்கம்.


மூடபத்தி ... ... ... ... 121

உலகு எதன் காரியம்? ... ... ... 128

திருவாரூர் பங்குனி உத்தர மகோற்சவம் ... ... 130

தலையன்பு—பதிவிரதா தர்மம் ... ... ... 137

ஜீவஹிம்சை ... ... ... ... 140

புத்தகவரவு முதலியன ... ... ... 143


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Militray Accts., Department)

நெ. 43, பாலையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1922.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

## சிவக்ஷேத்திராலய மகோற்சவ
## உண்மை விளக்கம்

இந்நூல் சிவவிளக்கம், க்ஷேத்திராலய விளக்கம், மகோற்சவ விளக்கம் என மூப்பாகங்களை யுடையது. இதில் அநேக ஞானார்த்தங்களைப் பற்பல அரிய நூற் பிரமாணங்களோடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 8.

---

குசேலோபாக்கியானம் :—மூலமும் அரும்பதவுரையும் வசனமும் தமிழ் பயில விரும்புவோருக்கு இன்றியமையாத சிறந்த இலக்கியம். உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. விலை அணா 12.

---

சிவகாருண்ய ஒழுக்கம் :—இது ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது. இதில் உயிர், உலகம் இவற்றைப் பற்றியும், உயிர்களிடத்து செலுத்தவேண்டிய கருணையைப்பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இது படிப்போர் மனங் கசிந்துருகுந் தன்மையி லெழுதப்பட்டுள்ளது. விலை அணா 4.

---

சித்தாந்தப் பிரகாசிகை. விலை அணா 2.

"நவசக்தி" ஆபீஸ்,
இராயப்பேட்டை, சென்னை.

---

உ
சிவமயம்.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்
## வெளியிட்டுள்ள நூல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆம் முதல் 1919ஆம் வரையில் வெளிவந்தவை.) காலிகோ கட்டடம் செய்தது விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | 0 | 1 | 0 |
| ஞானானந்த சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | 0 | 1 | 6 |
| சிவலிங்கமாலிய மான்மியம் | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | 0 | 4 | 0 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் | துந்துபிஞு ஐப்பசி, கார்த்திகைமீ | இதழ் |
| --- | --- | --- |
| 8 | 1922ஞு அக்டோபர், நவம்பர்மீ | 7, 8 |


## தேவாரம்

வென்றிலேன் புலன்களைந்தும் வென்றவர் வளாகந் தன்னில்
சென்றிலே னதலாலே செந்நெறி யதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்புகின்றே னீசனே னீசனேயோ
இன்றுளே னுளையில்லே னென்செய்வான் றோன்றினேனே.

---

## மூட பத்தி

கடவுளிடத்தும் பெரியோர்களிடத்தும் செய்யப்படும் அன்புக்கு பத்தியென்று பேர். இது மெய்ப் பத்தியெனவும் பொய்ப் பத்தி எனவும் இருவகைப்படும். மெய்ப் பத்தியாவது எக்காலத்தும் எக்காரணத்தாலும் இடையீடின்றி நிகழ்வது. இதுவே தலையன்பெனவும் உழுவலன்பெனவும் சொல்லப்படும். இதின் இலக்கணத்தை அறுபான் மும்மை நாயன்மார்கள் சரித்திரங்களால் அறியலாம். பொய்ப்பத்தியாவது உலகப்பற்றுக் காரணமாக வரும் இன்பத் துன்பங்களால் இடைபிடையே தடையுண்டுத் தடையுண்டு நிகழ்வது. இவ்வாறு பத்தி இருவகைப்பட்டிருப்பதன்றி, தலையன்பு இடையன்பு கடையன்பு என மூவகையாகவும் இருக்கும். இவற்றுள் தலையன்பாவது யாதொரு பலனையும் எதிர்பாராது வெறும் அன்பு காரணமாகவே நிகழ்வது. இடையன்பாவது முத்தியாகிய பயனை எதிர்நோக்கி நிகழ்வது கடையன்பாவது இம்மையில் உலக இன்பத்தையும் மறுமையில் சொர்க்காதி போகங்களையும் அடைய விரும்பிச் செய்யப்படுவது.

தலையன்பை விளக்கும் தமிழ்மறைப் பாக்களுள் சில வருமாறு :—

பெரிய புராணம்

கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடுமன் பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

அம்மையார் அற்புதத் திருவந்தாதி.

இடர்களையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறாக்கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென் னெஞ்சவர்க்கு.

திருவாசகம்

உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

பிறவா நெறியாகிய முத்தியை எதிர்நோக்கிச் செய்யப்படும் அன்பு இடையன்பெனச் சொல்லப்பட்டாலும், பற்றைவிட்டிருத்தலே வீடு எனப்படுதலினாலும், பற்றை விட்டவிடத்து உண்டாவது இறைவனாது இணையடி யன்பு ஒன்றே யாகலானும், பிறவாமை வேண்டிச் செய்யப் படும் அன்பும் தலையன்புக்குச் சமானமாக வைத்து எண்ணப்படு தலுமாம்.

திருவாசகம்

வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவா னியானுமுன்னைப் பரவுவனே.

இத்திருப்பாட்டில் முதலிரண்டடிகளால் வானவர்களாற் செய்யப் படும் கடையன்பும், பின்னிரண்டடிகளால் மாணிக்கவாசக சுவாமிகளாற் செய்யப்பெற்ற தலையன்பும் விளங்கும்.

இவ்வாறு பத்தி யென்பது இருவகையாகவும் மூவகையாகவும் இருக்க, சிலர் மூடபத்தி யெனவும் ஒருவகைப் பத்தியுண்டென நினைக் கிறார்கள். இவர்கள் பத்தியிருந்த ஊரில் குடியிருந்து மறியாதவர்

களாயினும், தங்களைக் கற்றவர்களெனவும் அறிவாளிகளெனவும் மதித்துக்கொண்டு, கண்ணப்ப நாயனார் முதலிய பக்த சிகாமணிகள் செய்த பத்தியை மூடபத்தியென்று சொல்லுகிறார்கள். பரமஞானிகளெல்லாம் கண்ணப்பநாயனாருடைய பத்தியைப் பலவாறாக வியந்து தோத்திரஞ் செய்திருக்கிறார்கள். அத்தோத்திரங்களுட் சில வருமாறு.

### திருவாசகம்

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபி
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப்பணித் தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

வேயனைய தோளுமையோர் பாக மது வாக விடை யேறி சடை மேல்
தூயமதி சூடிசுடு காடினட மாடி மலை தன்னை வின வில்
வாய்கலச மாக வழி பாடு செயும் வேடன் மல ராகு நய னங்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடு கா ளத்தி மலை யே.

### திருநாவுக்கரசு நாயனார்

காப்பதோர் வில்லுமம்புங் கையுடை யிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டத்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பது பற்றிக்கொண்டார் குறுக்கைவீ ரட்டனாரே.

### சுந்தரமூர்த்தி நாயனார்

கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்.

### நக்கீரதேவ நாயனார்

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார் கொலந்தோ கிறிபட்டார்—கீளாடை
யண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்ப ராவார் கதை.

இவ்வாறு கண்ணப்ப நாயனாரைத் தோத்திரஞ் செய்யாத பெரியோர்களில்லை. நக்கீரதேவ நாயனாரும் கல்லாடதேவ நாயனாரும் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் எனப் பெயரிய இருநூல்களை இயற்றியுள்ளார்கள். சங்கராசாரிய சுவாமிகளும் தாம் பாடிய சிவானந்தலஹரியில் "மார்க்கா வர்த்திதபாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்சாயதே-"

என்பதாதியாகவுள்ள ஸ்தோத்திரத்தால் கண்ணப்ப நாயனாரைப் பக்த சிரேஷ்ட சிகாமணி யென்று துதித்தனர்.

கற்றவரியாவரினும் கண்ணப்ப நாயனார் மேம்பட்டவர் என்பது தோன்ற "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்" என்றருளிச் செய்தனர் நாவலர் பெருமானாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

இதனால் கண்ணப்ப நாயனார் முதலிய பெரியோர்கள் செய்த பத்தியை மூடபத்தி யென்போர் பத்தியின் இலக்கணத்தை யறியாத அவிவேகிகளாவர் என்பது நிச்சயிக்கப்படும்.

உலகத்தில் கல்விமான்களெல்லோருமே பத்திமான்களாகவு மிருக்கவில்லை. கற்றவருள்ளே கடவுட்பத்தி செய்வோர் சிலரும், கடவுட்பத்தி சிறிதுமின்றி உலக மையலிலே ஆழ்ந்து கிடப்போர் பலருமா யிருக்கின்றார்கள். கல்வியில்லாதார் பலர் கடவுட்பத்தி செய்தலைக் காண்கின்றோம். "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவ—னற்றா டொழா அ ரெனின்" என்றருளிச் செய்தனர் பொய்யா மொழியாரும். இத்திருக்குறட் பாவால் கல்வியின்பயன் கடவுளைத் தொழுதல் என்பது பெறப்பட்டது. ஆதலால் கல்வி கற்றும் கடவுளைத் தொழாரெனின் அது பயனில் கல்வியாய் முடிதலின், கற்றவரே யாயினும் கடவுளை வணங்காதார் கல்லாத மூடரோடொப்பர் என்பது பெறப்படும். கல்லாதவரே யாயினும் கடவுட் பத்தி செய்வோர் கல்வியாலாய பயனைப் பெற்றவராதலின் அறிஞரே யாவர். "கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் — றாளை வணங்காத் தலை" என்பதும் இதனை வலியுறுத்தும் கடவுளை வணங்காதார் கண்ணிருந்தும் குருடர்களே யென்றும், காதிருந்தும் செவிடர்களே யென்றும், நாவிருந்தும் ஊமர்களே யென்றும், கை கால்களிருந்தும் முடவர்களே யென்றும், தலையிருந்தும் முண்டங்களே யென்றும் இத்திருக்குறட் பாவால் உரைக்கப்பட்டிருத்தற் போலவே, தெய்வத் தேவாரத் தமிழ் மறையாலும்

ஆமாத்தூ ரம்மானை
எம்பெம்மானென் றேத்தாதார் பேயரிற் பேயரே,
காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே,
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே,
கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே,

என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால், கடவுள் "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" எனவும் "மற்றவரறியா மாணிக்கமலை" எனவும், "கல்லா நெஞ்சில் நில்லா

னீசன்" எனவும், "கல்லாத மூடரைக் காணவு மாகாது" எனவும் தெய்வத் தமிழ்மறை முறையிடுவ தெற்றுக்கோ வெனின், முத்திக்குப் பத்தியும், பத்திக்கு ஞானமும், ஞானத்திற்குக் கல்வியும் சாதனங்களா யிருத்தலினால் அவை அவ்வாறு கூறுமென்க. ஞானத்திற்குக் கல்வி யானது இன்றியமையாத சாதனமாயினும், சரியை கிரியைகளாகிய தவங்களைச் செய்யாதவர்க்குக் கல்வியாலுண்டாகும் ஞானம் கலை ஞானமே யாயிருக்கும். இவர்களுக்கு அநுபூதி ஞானம் உண்டாக மாட்டாது. இதுபற்றியே பெரியோர்கள் சமயதீக்கை விசேடதீக்கை முதலிய தீக்கைகளைப் பெற்றுச் சரியை கிரியைகளை விதிப்படி அநுட் டிக்கும் பக்குவர்க்கன்றி ஏனையோர்க்கு ஞான நூல்களைப் போதிப்ப தில்லை. சரியையாதிகளில் விதிப்படி நின்று ஆட்படுவோர்க்கே இறை வர் திருவருளும், ஞான நூலாராய்ச்சியினால் அநுபூதி ஞானமும் உண்டாம்.

**தாயுமானசுவாமிகள் பாடல்**

விரும்புஞ் சரியை முதன்மெஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோலன்றோ பராபரமே.

நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன் னூற் போதம் பராபரமே.

சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றையொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே.

ஆணவமலத்தின் வலி சரியையில் காற்கூறு போம், கிரியையில் பாதியளவு நீங்கும், யோகத்தில் முக்காற்பங்கு ஒழியும், ஞானத்தில் முழுவதும் மாயும்.

சரியையி லாணவங் கால் சரிந்திடும்
கிரியையி லரைமலங் கெடுதி யுற்றிடும்
மருவுயோ கத்தில் முக்கான் மடிந்திடும்
விரிசிவ ஞானத்தின் முற்றும் வீயுமே.

மலம் தேயத்தேய உலகப்பற்றுக் குறைந்து குறைந்து, இறைவ னிணையடிப்பற்று மீதூர்ந்து செல்லும். இவ்வாறு சரியை கிரியாயோக ஞானங்களினால் அரும்பி மலர்ந்து காய்த்துப் பழுத்துக் கனிந்து மீதூர்ந்த பத்தியே பேரின்ப முத்தியாகமாறும்.

ஆன்மாக்களுக்கு ஆணவமல சம்பந்தத்தால் உண்டாயிருப்பது அஞ்ஞானமும், அஞ்ஞானங் காரணமாயுண்டாயிருப்பது பொருளல்ல

வற்றைப் பொருளென்று பற்றும் பற்றமாம். ஆதலால் பற்றொழிய வேண்டில் அஞ்ஞானத்தை யொழித்தல் வேண்டும். அஞ்ஞானமோ வெறும் ஞான நூலாராய்ச்சியால் ஒழிவதன்று. ஞான நூலாராய்ச்சியோடு வினைகேடனாகிய இறைவன் வழிபாட்டையுங்கொண்டே அதனை யொழித்தல் கூடும். இதுபற்றியே திருவள்ளுவ நாயனார்,

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்றருளிச்செய்தனர்.

ஞான நூல்களை நல்லாசிரியன்பாற் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியிருத்தல் எளிதில் வாய்ப்பதன்று. போதிய கல்வித்திறமுடைய பக்குவர்க்கே அவை போதிக்கப்படுவனவாம். ஆதலால் ஞான நூல்களை யோத அருகரல்லாதார் சரியை கிரியைகளில் நின்று நியமமாகச் சிவபூசை சிவாலயத்தொண்டு சிவனடியார் பூசை சிவபுராண படனம் முதலியன செய்வதனால் பக்தியும் ஞானமும் அடையப்பெறுவர். இவ்வாறு செய்து இறைவனுக்கு ஆட்படுகின்றவர்கள் கல்லாதவரே யாயினும் கற்றவராயினும் மாகேசுரரென வணங்கப்பெறும் பெரியோராவர்.

சரியை கிரியையில் நின்று கடவுளை வழிபடுதலும் அவரருளிருந்தாலன்றி நேர்படாது. "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்றருளிச் செய்தனர் வாதவூரடிகள். அவரருளும் புண்ணியமிருந்தாலன்றி யுண்டாகாது. புண்ணியம் பசு புண்ணியம் பதிபுண்ணியம் என இருவகைப்படும். பயன் குறியாது வெறும் இரக்கமாத்திரத்தாற் செய்யப்படும் பசு புண்ணியத்தால் இறைவரருளும் சரியை கிரியைகளாகிய பதிபுண்ணியச் செயல்களும் ஒருங்கு கூடும்.

### சிவதத்துவ விவேகம்

உன்றிருவடிக்கீ ழுறுதியாமன்பு முன்றிரு வருளினாற் கிடைப்ப
தன்றி நூற்பலவு மாய்ந்தாலுரை செயளப்பருந் திறமையான் மதியான்
மன்றவே கிடைப்பதன்று மற்றதனை மாதவஞ் செய்திலாக் கயமை
துன்றிய புலையோர் யாங்ஙனம் பெறுவர் சோதியே கருணைவாரிதியே.

### தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

இனி, கண்ணப்ப நாயனார் தமது செருப்பணிந்த காலினால் காளத்தியப்பர் முடிமிசையிருந்த பத்திர புட்பங்களை யகற்றியதும், அவருக்குத் தமது பல்லினால் அதுக்கிப் பதம் பார்த்து எச்சிலாக்கிய மாமிசத்தை உண்பித்ததும், வாயினிடமாக நீரை முகந்து சென்று அபிஷேகித்ததும், குடுமியில் செருகிக்கொண்டு சென்ற பூக்களை அவர் திருமுடியின் மீது சாத்தியதும் அறிவுடையார் செயல்களாகுமாவெனவும், இவையும் அறிவுடையார் செயல்களாமாயின், மிகவும் பாடுபட்டு வேதாகமங்களையோதி அவற்றில் விதித்த விதிகளைக் கடவாது பூசை புரிவதேன் எனவும், அன்பிருந்தால் அவரவர்கள் தத்தம் மனம் போனபடியெல்லாம் கடவுளைப் பூசிக்கலாமென்று இவர் சரித்திரத்தால் விளங்குகின்றதல்லவா எனவும் ஐயங்கள் நிகழலாம். வேதாகமங்களில் கடவுளைப் பூசித்துக் கதியடைய வேண்டுவோர் இன்ன இன்னபடி பூசித்தல் வேண்டுமென விதிகள் கூறப்பட்டுள்ளன. அவ்விதிகளின்படி பூசித்தலே முறைமையாகும் அவைகளுக்கு மாறாகப் பூசித்தல் குற்றமாம். வேதாகம விதிப்படி மெய்யன்போடு கடவுளைப் பூசிப்பவர்கள் அவரவர் பக்குவத்திற்கேற்ப அவ்வப்பிறவிகளிலேயே யாயினும், பல பிறவிகளிலேயாயினும், தத்தம் சீவகரணங்களெல்லாம் சிவகரணங்களாக மாறி முடிவில் அன்புருவாய் நிற்கப்பெறுவர். அன்புருவான பிறகு அவர்களாற் செய்யப்படும் செயல்கள் சீவகரணங்களோடு கூடிய ஏனைய மனிதர்கள் செய்யும் செயல்கள் போலிராமல், பாலர், பேயர், பிசாசர் முதலியவர்கள் செய்யும் செயல்கள் போலிருக்கும். பிசாசர் முதலியோர் தம் வசமழிந்து செய்யுங் காரியங்களால் அவர்கள் மீது குற்றங் காண்பது உலகவழக்கன்று. அன்றியும், பேயினாற் பிடியுண்டவன் செயல் அவன் செயலாகாது அவனைப் பிடித்த பேயின் செயலாவது போல், கரணங்களெல்லாங் கடந்து நின்ற கறைமிடற்றன் திருவருளால் தங்கள் சீவகரணங்களெல்லாம் சிவகரணங்களாக மாறி அன்புருவாய் நின்றவர்கள் செய்யும் செயல்களியாவும், அவர் செயலாகாது அன்பின் விளைவேயாகும். ஆதலால் கண்ணப்ப நாயனார் செய்த பூசையும், பொருவிலன்புருவமாய் நின்று செய்த பூசையாகையால், அது விதிநிஷேதங்களைக் கடந்து சிவபெருமானுக்கு உகந்த ஒப்பற்ற பூசையாயிற்று.

கண்ணப்ப நாயனார் அதற்கு முன் அருச்சுனனாக அவதரித்து சிவபிரானை நோக்கி அரிய தவங்களைச் செய்து, கண்ணபிரானால் ஞானோபதேசஞ் செய்யப் பெற்று, பின் வேடர் குலத்திலவதரித்துக்

காளத்தியப்பரைத் தரிசித்த மாத்திரத்தில் அன்பு நவமாக நின்றனர் என்று திருக்காளத்தி புராணம் கூறுகின்றது.

இதனால் மூடபத்தி யென்பதொன்றில்லை யென்பதும், மூடபத்தி என்பது முயற்கொம்பு என்பதுபோல் பொருளில் மொழி என்பதும் விளக்கமாம்.

பத்திரிகாசிரியர்.

---

## உலகு எதன் காரியம்?

(ஞானசித்திப் பிரசுரம்)

மாயாவாதிகள் உலகு பிரமத்தின் காரியமென்பர். உலகு சடப் பொருள், பிரமம் சித்துப்பொருள். ஆதலால் சடமாகிய உலகம் சித்தாகிய பிரமத்தினின்றுந் தோன்றுதல் அடாது. சடத்தினின்று சடம் தோன்றுமேயன்றிச் சித்தினின்று சடம் தோன்றமாட்டாது. அன்றியும், சித்து ஏனைச்சடப்பொருள் போலக் காரண காரியப்படுவதன்று. அதினும் பிரமப்பொருள் ஒரு பொழுதும் காரியப்படமாட்டாது. பிரமம் காரியப்பட்டு உலகாகுமாயின், அதுவும் சடப்பொருளேயாக வேண்டும். பிரமம் சித்துப்பொருளென்பதும் யாவர்க்கும் ஒக்குமாதலின், அது சித்தியல்பினின்று மாறுபட்டுச் சட வியல்படையுமென்றல் அறியாமையாம்.

இனி, பிரமம் சித்துப் பொருள். அதின் காரியமாகிய உலகு மாத்திரம் சடப்பொருளா மென்னில், அதுவும் அறிவிலார் கூற்றாம். என்னை? காரணம் எவ்வாறோ காரியமும் அவ்வாறாமன்றி, அவை தம்முள் வேறுபட்ட இயல்பின வாதல் ஒவ்வாமையினென்க. உதாரணமாக மண் காரணம் குடம் காரியம். இவ்விரண்டினுள் மண்ணும் சடம் குடமும் சடம். அது போலவே சடமாகிய காரிய உலகுக்குச் சடமாகிய காரணமே வேண்டப்படும். மாயாவாதிகள் இஃதறியாது உலகு பிரமத்தின் காரியமென்பர்.

இனி, உலகு பிரமத்தின் காரியமாதல் மண்ணிற் குடம் போலப் பரிணாமமாய்த் தோன்றுவதன்று, இப்பியில் வெள்ளிபோல விவர்த்தனமாய்க் காரியப்படுதலின் அக்குற்றம் சாராதெனின், அதுவும் பொருந்தாது. என்னை? இப்பியும் சடப்பொருள். அதன் கண் விவர்த்தனமாய்த் தோன்றும் வெள்ளியும் சடப்பொருள். இவ்விடத்தும் சடத்திற் சடம் தோன்றிற்றேயன்றிச் சித்திற் சடம் தோன்றவில்லை. ஆதலின் இத்திருட்டாந்தமும் போலியாயொழியு மென்க. அன்றியும் உலகு

பிருதிவி முதலிய ஐம்பெரும் பூதங்களின் காரியம். அப்பூதங்கள் வாளுதியாக முறையே ஒன்றினென்றாய்த் தோன்றுமென்பது மாயா வாதி மதம். மண் நீரின் காரியம். நீர் தேயுவின் காரியம். தேயு வாயுவின் காரியம். வாயு ஆகாயத்தின் காரியம். இவ்வாறு இவை ஒன்றினென்றாய்த் தோன்றுமென்பது அவர் மதமாகலின், இவற்றுள் ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும் காரியப்பட்டது விவர்த்தனமா பரிணாமமா என்பது ஆராயத்தக்கது, இவர் மதம் போலவே வைத்துக்கொண்டு ஆராயினும், அவற்றை விவர்த்தன காரியமென்றல் அமையாது. பஞ்ச பூதங்களும் உள்பொருள்களாக அவற்றை இப்பியில் வெள்ளிபோலப் பொய்த்தோற்ற மென்னலாமா? மண்ணென்பதொன்றில்லை. அது நீரின் பொய்த்தோற்றமென்றால் அதனை ஒப்புக்கொள்பவரெவர்? நீரென்பதொன்றில்லை அது அனலின் பொய்த்தோற்றம் என்னலாமா? அனலென்பதொன்றில்லை. அது வாயுவின் பொய்த்தோற்றமென்ன லாமா? வாயுவென்பதொன்றில்லை. அது ஆகாயத்தின் பொய்த்தோற்ற மென்னலாமா? மண் நீர் அனல் வளி வெளி என்னும் ஐந்தும் வெவ்வேறு பொருள்களாய், வெவ்வேறு குணங்கள் உள்ளனவாய் இருத்தல் பிரத்தியக்ஷமன்றோ? அவை ஒன்றினென்றாய்த் தோன்றுமென இவர் சொல்லினும், ஆகாயத்தின் பரிணாமம் வாயுவும், வாயுவின் பரிணாமம் தேயுவும், தேயுவின் பரிணாமம் நீரும், நீரின் பரிணாமம் மண்ணும் எனக் கூறலாமன்றி அவற்றை விவர்த்தனமான பொய்த்தோற்றமென்றல் பிரத்தியக்ஷ விரோதமாம். இக்கால ஆங்கிலத் தத்துவ சாஸ்திரிகளும் இவை ஒன்றினென்று பரிணமித்தே தோன்றுமென்பர்.

இவ்வாறாக மாயாவாதிகள் பூதங்களை விவர்த்தன மென்பரோ, பரிணாமமென்பரோ? விவர்த்தனமென்னின் அது பிரத்தியக்ஷ விரோத மாகலின் ஒப்பத்தக்கதன்றாம். பரிணாம காரியமென்னின், அவ்வாறே அத்தூல பூதங்களுக்குக் காரணமான சூக்கும பூதங்களும், அவற்றுக்குக் காரணமான பூதாதிகாகங்காரமும், அதற்குக் காரணமான புத்தியும், அதற்குக் காரணமான அவ்வியக்தமும், அதற்குக் காரணமான பிரகிருதிமாயையும், அதற்குக் காரணமென இவர் சொல்லும் பிரமமும் முறையே ஒன்றினென்று பரிணாமமுற்றுத் தோன்றுதல் வேண்டும். மண் குடமானதுபோல முதலில் இவருடைய பிரமம் பரிணமித்து மாயையாக, அம்மாயை பரிணமித்து அவ்வியக்தமாக, அது பரிணமித்துப் புத்தியாக, அது பரிணமித்துப் பூதாதிகாகங்காரமாக, அது பரிணமித்துச் சூக்குமபூதங்களாக, அவை பரிணமித்துத் தூலபூதங்களாக

அவை பரிணமித்து உலகமாக, இவ்வாறே பிரமம் உலகமாய்ப் பரிணமித்து அழிவெய்த வேண்டி வரும். மாயாவாதிகள் இவ்வாறு, ஆலோசனையின்றி உலகு பிரமத்தின் காரியமெனக் கூறி முடிவில் வெகு சங்கடங்களில் மாட்டிக்கொள்கின்றனர். பூதகாரியம் பரிணாமமென்பது பிரத்தியட்சமாதலால் ஏனைய காரிய காரணங்களும் பரிணாமமாயே யிருத்தல் வேண்டுமென்பதனை மறுத்தல் இயலாது.

இனிப் பூதங்கள் மாத்திரம் பரிணாமம், ஏனைய காரணங்களும் முதற்காரணமான பிரமமும் பரிணாமமன்று, அவை விவர்த்தனமாமென்றலும் அமையாது. என்னை? காரியமான பூதங்களுக்கு எவ்வாறோ அவ்வாறே காரணமான மற்றைய பொருள்களுக்கும் தோற்ற நாசமிருத்தல் நியதமாகலினென்க.

இனி ஞானானந்த வஸ்துவாகிய பிரமம் உயிர்களின் அஞ்ஞான மயக்கங்களை ஒழிக்கும் மாயாதிமிர பாநுவாமன்றி உயிர்களை மயக்கும் மாயையாய் ஒரு பொழுதும் நிற்கமாட்டாது. உயிர்களுக்கு அவித்தையை அஞ்ஞானத்தை விளைவிக்கமாட்டாது. மாயாவாதிகள் பிரமம் மாயையாய் உயிர்களுக்கு அவித்தையை யுண்டாக்கி மயக்கிப் பரம பந்தமாய் நிற்குமென்றலும் பெரியதோர் அநியாயமாம்

ஆதலால், பிரமம் ஞானம் விளைவிப்பது. மாயைக்கு அது காரணமன்று. சித்தாகிய பிரமம் சடமாய் மாறமாட்டாது. சச்சிதானந்த வஸ்துவாகிய பிரமம் அநிர்த சடதுக்க காமான மாயையாய்த் திரியமாட்டாது. முத்திக்கு வித்தான பிரமம் பந்தகாரணமான மாயையாக மாறமாட்டாது. விருத்தி பரிணாமம் விவர்த்தனம் என்னும் மூவித காரியப்பாட்டினும் படாத பிரமம் விவர்த்தனமாய் அல்லது பரிணாமமாய்ப் பிரிதொன்றாய்க் காரியப்படமாட்டாது. என்பதை நன்குணரவேண்டும். அதனால், உலகு பிரமத்தின் காரிய மென்றல் ஒரு சிறிதும் பொருந்தாது. மாயை சடப்பொருளாகலின், அதுபோலச் சடமாகிய உலகமும் மாயாகாரிய மென்றலே அமைவுடைத்தாம். இஃதறியாது பிணங்குவோருரை யெல்லாம் போலியுரையா மென்றொழிக.

---

## திருவாரூர் பங்குனி உத்தர மகோற்சவம்

(120-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவபெருமான், உமாதேவியாரும் சுப்பிரமணியக் கடவுளும் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியோடு பொருந்தத் திருக்கைலாச மலையின் கண் வீற்றிருத்தல் போல அங்கே வீற்றிருத்தலும், அத்திருக்கைலாசபதியி

னிடத்திற் பயின்ற அன்பினனும், இடைவிடாது ஒரு பொருளைக் குறிக்கொண்டு பாதுகாத்திருப்பவன் சிறிது அவசரமாய்க் கண்ணுறங்கியதுபோல முசு முகத்தை வாங்கியும் சிறிது மயங்கினவனும் ஆகிய முசுகுந்தன் அவரைக் கண்டு, பரவசப்பட்டு, தொழுது கூத்தாடி, திருவடிகளை முடிமேற் சூடி, உளமுருகித் துள்ளி, வேதங்களைப் பாடி, கைகளைக் கொட்டி, சொல்ல முடியாத ஆனந்தமுற்று, மெய்புளகித்து, உரை தடுமாறி, "முன்பு திருக்கைலாச மலையின்மீது கிருபாநிதியாகிய சிவபெருமான் வீற்றிருந்த இந்த அருமைத் திருக்கோலத்தைத் தரிசித்துத் தரிசித்து உள்ளத்தே நிறைந்த பெருமகிழ்வெய்தி யிருந்த தமியேன் இம்மானுடப் பிறப்பினால் மயங்கி நெடுநாள் அவரை மறந்தேன் கொல்லோ" என்று கூறி, அவரை நோக்கி,

ஏகவஸ்துவே காத்தருளுக, எவர்க்குந் தலைவரே காத்தருளுக, உமாதேவிபாகரே காத்தருளுக, மேலாகிய பரஞ்சோதி வடிவே காத்தருளுக, நீலகண்டரே காத்தருளுக, இடபாரூடரே காத்தருளுக, தக்கன் வேள்வி தடிந்த தலைவரே காத்தருளுக, பிரம விட்டுணுக்களாலறிதற்கரியவரே காத்தருளுக, விரும்பத்தக்கவரே காத்தருளுக, நமது தலைவரே காத்தருளுக, செம்பொன்னையும் இரத்தினத்தையும் நிகர்த்தவரே, காத்தருளுக, சிவபெருமானே காத்தருளுக, திரிநேத்திரரே காத்தருளுக நாகாபரணராகிய புனிதரே காத்தருளுக, பரிமள விபூதியணிந்த தலைவரே காத்தருளுக, யானைத்தோலைப் போர்த்தவரே காத்தருளுக, சங்கரரே பரமேஸ்வரரே காத்தருளுக, தாணுவே காத்தருளுக, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே காத்தருளுக, உயிர்க்குயிரே காத்தருளுக, வேதமுடிவே காத்தருளுக, என்னைவந்தாண்டு பூமியில் விடுத்தவரே காத்தருளுக, தேவரீருடைய வடிவைக் காட்டி யென்னை நினைப்பித்தவரே காத்தருளுக, யார் யாரை யாராயினும் வணங்கின் அவரவரிடமாகக் கொண்டு வணங்குபவர்க்கருள் புரிபவரே காத்தருளுக, மெஞ்ஞானத்தாலே வெளிப்படவுணர்ந்தார்க்குத் தெய்வபோகத்தையும் மோக்ஷத்தையும், சிறப்புடனீபவரே காத்தருளுக, பிரம விட்டுணு முதலிய தேவர்களது பதத்தை யெமக்குக்கொடுக்கும் தற்பரரேகாத்தருளுக, அடைந்தோர்க்கு எல்லாத் தேவர்களுடைய பதங்களையுங் கொடுக்குஞ் சர்வலோகைக நாயகரே காத்தருளுக, தேவரனைவரும் பாங்காக நடுவணமர்ந்து வேதமுணர்ந்த பெரியோர் வந்து வழிபட எழுந்தருளுபவரே காத்தருளுக, முப்பத்தாறு தத்துவங்கட்கும் மேலாகிய தலைவரே காத்தருளுக, காத்தருளுக, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளுக என்று துதித்தனன்.

இவ்வாறு முசுகுந்தச் சக்கிரவர்த்தி துதித்தலும், எம்பெருமான் கருணைசெய்து, அவனுடைய முகத்தை நோக்கி, "விட்டுணு அளவில்லாத காலம் நம்மை அன்போடு பூசித்து இந்திரனிடத்தில் வைத்தான். அரசனே, நீ நம்மைப் பூமியிற் கொண்டுபோய்ப் பூசனை செய்வாய்" என்று இந்திரன் கேளாவண்ணம் சொல்லியருளினர். முசுகுந்தன் மிக்க பெருமகிழ்ச்சியுற்று, "சுவாமீ, உம்முடைய திருவுள்ளம் இதுவாயின் அடியேன் உய்ந்தேன்" என்று ஆச்சரியமடைந்தான். இந்திரன் தன் சிவார்ச்சனையை முடித்து, பின் அக்கினி காரியத்தையும் பிறவற்றையும் செய்து, வேறோர் கோயிலினுட்போய், காமதேனுவை அழைத்து முசுகுந்தனுக்கு விருந்து செய்வித்து, விசித்திர வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் மணிகளையும் முத்துக்களையும் தெய்வப் படைக்கலங்களையும் பிறவற்றையும் உதவி, "இன்னும் உனக்கு வேண்டியதைச் சொல்லுதி" என்றான். முசுகுந்தன் "மகாராசனே, நீ பூசை செய்கின்ற கடவுளை யான் பூவுலகிற் கொண்டுபோய் வைத்துப் பூசித்தற்காக அன்போடு கொடுக்குதி" என்றான் இந்திரன் அவனுக்கு இவ்வாறு சொல்வான்.

"முசுகுந்தனே கேட்பாய், விட்டுணு புதல்வர்ப் பேறின்மையினால் முன்னாளிலே சிவபெருமானுடைய திருவடிகளே தஞ்சம் என்று சிந்தை செய்து ஊழிகாலந் தவஞ்செய்தபொழுது, சிவபெருமான் பார்ப்பதியாருந் தாமுமாய் பூதப்படைகள் சூழ வெளிப்பட்டார். விட்டுணு தவத்தை விடுத்து விரைவில் எழுந்து துதித்து வணங்கி நிற்ப, சிவபெருமான் மகிழ்ந்து அருள் செய்து, 'நீ நெடுங்காலம் நம்மை நோக்கித் தவஞ்செய்து நின்றாய்; வேண்டிய வரம் யாது சொல்லுதி' என்று வினவினர். விட்டுணு 'எம்பெருமானே அடியேனுக்கு அழியாத ஆயுளையும் காத்தற்றொழிலையும் சிதேவியோடிருக்கிற பெருஞ் செல்வத்தையும் ஈந்தருளினீர்; புதல்வர்ப்பேறில்லாமல் வருந்தினேன்; இனி அதனையும் தமியேனுக்கு ஈந்தருளும்' என்று வேண்டினர். சிவபெருமான் நன்றென்று, திருப்புன்முறுவல் செய்து, உனக்கு ஒரு புத்திரனை உதவினோம்' என்றருள்புரிந்தார். விட்டுணு உமாதேவியாரைத் தமக்குத் தங்கை யென்று எண்ணியோ, சிவபெருமானுக்கு இவளும் நம்மைப் போல ஒரு சத்தியென் றெண்ணியோ, மலைமகளென வெண்ணியோ அறியேம், முன்செய்த வினையினால் அவரைச் சிறிதும் அன்பு செய்து வணங்கித் துதித்திலர். [ஐம்புலன்களையும் ஒரு வழிப்படுத்து ஆசையைப் பற்றறக் களைந்து, இறக்கவரினும் தம் நிலைமை திரியாத உண்மையையே கடைப்பிடித்து, உலகமாதாவாகிய எம்பெருமாட்டியை

நீக்கி எம்பெருமானையே வழிபடுதல் பிருங்கி முனிவர் ஒருவருக்கன்றி ஏனையோர்க்குக் கூடுமோ!] அப்பொழுது எம்பெருமாட்டியார் விட்டுணுவை நோக்கி, நீ இங்கே என்னை அவமதித்தாய், ஆதலால் எம்பெருமானிடத்தும் அன்புடையையல்லை. நீ பெறுகின்ற புத்திரனும் எம்பெருமானுடைய முனிவினால் விரைவில் அழிக' என்று சாபத்தைக் கூறி, சிவபெருமானை நோக்கி, பரப்பிரமமும் யானே யல்லதில்லையென்று அறிவில்லாத மானுடப் பசுக்களை மருட்டித் திரிகின்ற வஞ்சகனாகிய இவனுக்கு முன், ஞானிகளுடைய அறிவினாலன்றி அணுகுதற்கரிய நீர் அணுகி நிற்கலாமா? உயிர்க்குயிராகிய கடவுளே, மீண்டு செல்வோம் வருக' வென்று கூறி எம்பெருமானை அழைத்துக்கொண்டு போயினார்.

விட்டுணு அதனைக்கண்டு, துன்பமுற்று அஞ்சி அயர்ந்து மனந் தடுமாறி, மெய்நடுங்கித் தளர்ந்து, பல பொருள்களை யேற்றிய மரக்கலத்தைச் சமுத்திரத்தின் கரைக்கணித்தாய்க் கவிழ்த்த ஒரு வணிகன் போல வருந்தி, 'உமாதேவியார் பொருட்டால் இங்கே இந்த இடையூறு வந்தது' என்று உன்னி, சிவபெருமானையும் உமாதேவியாரையும் குமரக் கடவுளையும் ஒரு திருவுருவாக அமைத்து, வேதாகம விதிப்படி மெய்யன்பினாற் பூசனைசெய்து பின்னும் வருந்திப் பல்லாயிரகோடி வருஷம் தவமியற்றினார். முனிவர்கள் அதனைக் கண்டு 'இன்னமுஞ் சிவபெருமான் வருகின்றிலர்; இனித் தவஞ்செய்பவர் இல்லை' என்றார்கள். அப்பொழுது, சத்தியுஞ் சிவமுமாய் உலகங்களை எல்லாந் தந்த உமாதேவியாரும் சிவபெருமானும் வெளிப்பட்டு வருதலும், விட்டுணு மனமகிழ்ந்து, ஓடிப்போய், முன்னே அம்மையாருடைய திருவடிகளில் வணங்கி, பின் எம்பெருமானுடைய பாதங்களை வணங்கி, அவ்விருவருடைய புகழ்களையும் வேதவசனங்களாலே துதித்தார். சிவபெருமான் அவருக்கு நல்லருள் புரிந்து 'உமையே நீ இவனுக்கு அருள் செய்' என்று கூற அவர் விட்டுணுவை நோக்கி, முன்னே எம்பெருமான் உனக்குத் தந்த வரமும் யான் முனிந்து கூறிய சாபமும் பிழைபடமாட்டா; இனி யார்தாம் அவற்றை மாற்றவல்லார்! உன் மகன் எம்பெருமானுடைய நெற்றிக் கண்ணின் அக்கினியினால் இறந்து, பின்னர் முன்போலத்தோன்றி, உயிரோடு இருக்குக' என்று கூறினார். சிவபெருமானும் அவ்வாறாகுக' என்றருளி, உமாதேவியாரோடு மறைந்தார். விட்டுணு ஆச்சரியமுற்று, தமது பதிக்குப் போய் வீற்றிருப்ப; கரிய நிறத்தையுடைய மன்மதன் அவளுடைய மனத்தினின்று தோன்றி, அழகிற் சிறந்த காளையாய், பூம் பாணங்களையும் கருப்பு வில்லையும் கையிலேந்தி, ஆடவர்களும் பெண்

களும் இன்பத்தின்மேல் மனம் வைக்கும்படி போர்புரிந்து உலாவினன். அவன் ஒருநாள் முதற்கடவுளாகிய சிவபெருமான் மீது பூம்பாணங்களைச் சிதறி, அவருடைய நெற்றிக் கண்ணினுற் பொடிபட்டு, பின் அவர் அருளால் அருவும் உருவும் அடைந்து முன்னே தனக்குள்ள வளங்களோடு இருந்தான். உமாதேவியாருடைய திருவாக்கு தவறுமோ! இந்தச் சரித்திரம் இவ்வளவிலிருக்க

விட்டுணு முன்னே தாம் அன்போடு பூசித்துவந்த சோமாஸ்கந்தமூர்த்தியைத் தம்முடைய மார்பில் வைத்துக்கொண்டு பாற்கடலிலே சேஷ சயனத்தின் மீது பற்பல காலம் துயின்றனர். அவருடைய, நெட்டுயிர்ப்பின் அசைவினலும், சேஷ சயனத்தின் உயிர்ப்பசைவினுலும், திரைகளையுடைய பாற்கடலின் அசைவினுலும், தியாகராஜசுவாமி அவருடைய மார்பில் ஆடிக்கொண்டிருந்தார். அக்காலத்தில் வாற்கலி என்னும் அவுணன் என்னையும் தேவர்களையும் போரிலே தோற்கச் செய்து வெற்றி யடைந்தான். நான் தேவர்களோடு விட்டுணுவை அடைந்து வணங்கி, 'நாங்கள் வாற்கலி என்னும் அவுணனுக்குத் தோற்ருேம். நீர் எம்மைக் காத்துக் கொள்ளும்' என்று வேண்டினேன். அவர் சேஷசயனத்தினின்றும் அறிதுயில் விட்டெழுந்து, 'அஞ்சுவதொழிமின்; உங்களுக்குத் துன்பத்தைச் செய்த வாற்கலியைக் கொல்லுவோம்' என்று அபயஹஸ்தம் செய்து, 'என்னுடைய மார்பிலே ஒரே மூர்த்தியாய் வீற்றிருக்கின்ற உமாதேவியாரையும் சுப்பிரமணியக் கடவுளையும் சிவபெருமானையும் பூசைசெய்து உன்னுடைய தீவினைப்பயனை நீக்குவாய்' என்று அன்போடு அம்மூர்த்தியைத் தம்முடைய மார்பினின்றும் எடுத்து என் கரத்தில் ஈந்தார். நான் தவவலிமையினுல் அதனைச் சிரசின்மேற் றங்கினேன். அதன் பின் விட்டுணு பாற்கடலை நீங்கி, தேவ சேனைகளோடு சம்புத் தீவிற்போய் எம்பெருமானுகிய சிவன் பரமானந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற தில்லையிலுள்ள கனகசபையைத் தொழுது, பரவசமாய்த் திருமுன்னே வீழ்ந்திறைஞ்சி, அறிவுசெயலிழந்தவிடத்து உளதாம் அன்பு மீதூர்ந்து, இது காரணமாகக் கண்கள் இரண்டினின்றும் ஆனந்த பாஷ்பம் பொழிய, சர்வான்மாக்களுக்கும் அந்தரியாமியாகிய சிவபெருமானது அகண்டாகார நித்தவியாபக எல்லையைத் தலைப்பட்டு, அதிலழுந்தி, நான்கு மாசம் எழுந்தாரல்லர். விட்டுணு இங்ஙனம் பரமானந்தாவசமாய், ஆதிமத்தியாந்தரகிதராகிய சிவபெருமானது பரமானந்த சாகரமாகிய திருவடியின் கீழே அடங்கிநின்று, பின் அவருடைய ஆஞ்ஞையினுல் நின்மல துரியாதீத சிவபோகநிலையை அடைந்த ஆன்மாவானது

மீண்டு சகலாவஸ்தையை அடைய, சரீரவுணர்வுக்குரிய தத்துவங்களெல்லாம் முறைமுறையே அவரிடத்து வந்து கூடின. கண் துயின்றவன் எழுந்தாற்போல விட்டுணு எழுந்து, சிற்சபேசரது திருவடித்தாமரையை வணங்கித் துதித்து, புறத்தில் வந்து, வாற்கலியோடு பெரும்போர் செய்து, அவனுயிரை யுண்டு, தேவர்களுக்கும் எனக்கும் விடையீந்து, முன்போலப் பாற்கடலிலே சேஷசயனத்தின் மீது அறிதுயில் செய்தார். யான் தேவர்களோடு சுவர்க்கத்துக்கு மீண்டு வந்து, அன்று முதல் இன்றளவும் விட்டுணுவின் மார்பில் வீற்றிருந்த சோமாஸ்கந்த மூர்த்தியை விதிப்படி அருச்சனை செய்துகொண்டு வந்தேன். மகாராசனே, நீ இந்த மூர்த்தியைப் பூசைசெய்தற்காகத் தரும்படி கேட்டாய். அப்படி உனக்குத் தருதல் என் சம்மதத்தைப் பற்றியதன்று; உனக்கு விட்டுணுவின் சம்மதம் உண்டானல் அதன் பின் இவரைத் தருவேன்" என்று இந்திரன் முசுகுந்தனுக்குக் கூறினன்.

முசுகுந்தன் அதனைக் கேட்டு, திருப்பாற்கடலிற் சென்று விட்டுணுவை வணங்கி நின்று, சோமாஸ்கந்த மூர்த்தியை வேண்டுதலும், "நாம் இந்திரனிடத்தில் வைத்த நம்முயிர்க்குயிராகிய தியாகராஜ மூர்த்தியை பூமியிற்கொண்டுபோய்ப் பூசிப்பாய்" என்று கூறினர். முசுகுந்தன் நன்றென்று விட்டுணுவினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, இந்திரனிடத்திற் போய், அதனைச் சொல்லினன். அவன் ஈன்றணிய பசுவைப்பிரியுங் கன்றுபோல மனந்தளர்ந்து இரங்கிப் புலம்பி, ஒரு சூழ்ச்சியைக் கருதி, தெய்வத் தச்சனைக்கொண்டு, தான் வைத்துப் பூசிக்கும் சோமாஸ்கந்த மூர்த்திபோன்ற, ஆறுமூர்த்திகளை ஆறுதாஞ் செய்வித்து ஒவ்வொன்றாக முசுகுந்தனுடைய கையிற் கொடுப்ப, அவன் அவற்றை வாங்கி, அவைகள் வீதிவிடங்கப் பெருமானைப்போல இருந்தும் தனக்கு ஒன்றுஞ் சொல்லாதிருந்தமையால் வஞ்சனை என்று அறிந்து, "இவர் அவர் அன்று" என்று ஆறுதரமுங் கூறினன். இந்திரன் அதனைக் கேட்டு, விட்டுணுவினுடைய மார்பாகிய பொன்னூஞ்சலிலே ஆடிய சோமாஸ்கந்த மூர்த்தியைக் கொண்டு வந்து, 'இவர் அவராமோ?' என்றான். இந்திரன் இவ்வாறு உரைப்ப; சோமாஸ்கந்த மூர்த்தியானவர், அவன் அறியாவண்ணம் முசுகுந்தனுடைய முகத்தை நோக்கி, "நாம் உன்பால் வந்தோம். இனி நம்மைப் பூவுலகிற் கொண்டுபோய் மனமகிழ்ச்சியோடு பூசைசெய்குதி' என்றருள் செய்தார். முசுகுந்தன் ஒப்பில்லாத மனமகிழ்ச்சியடைந்து, வணங்கித் துதித்து, "விட்டுணுவினுடைய பூசையை ஏற்றிருந்தவர் இவராமாம்! அரசனே இவரைத்தருக" என்று வாங்கினன். இந்திரன் முசுகுந்

தனை நோக்கி, "இவரை, முன் யான் தந்த அறுவரோடும் பூமியிற் கொண்டுபோய், திருவாரூர் முதலாகிய தலங்களிற் பூசிப்பாய்" என்று சொல்லி விடைகொடுத்து அனுப்பினான்.

முசுகுந்தன் நன்றென்று இந்திரனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு பூமியில் வந்து, திருவாரூரிலே வன்மீகப்பெருமான் வீற்றிருக்கும் கமலாலயத்தில் விட்டுணு பூசித்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் திவ்விய சிங்காசனத்தின் மீது விதிப்படி தாபித்து, மற்றை ஆறு சோமாஸ்கந்த மூர்த்திகளையும் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளிலி, திருவான்மியூர், திருமறைக்காடு என்னும் ஆறு தலங்களிலும் ஒருநாளிலே தாபித்து, விதிப்படி சிரத்தையோடு பூசை செய்வித்து, அதன்பின் திருவாரூர்த் தியாகராஜப் பெருமானுக்குத் திருவிழாச் செய்யும்படி நினைத்தான். அந்நாளில் இந்திரன் தான் பூசித்த கடவுளை முசுகுந்தனுக்குக்கொடுத்த பாவத்தால் விண்ணுலக பாக்கியத்தை யிழந்து, நீசவேடந்தாங்கி தியாகராஜப் பெருமானுடைய திருவிழாவைச் சேவித்தற்கு எத்தேசத்தாரும் வருக' என்று யானையின் மீதேறித் திருவாரூர் வீதியைச் சூழ்ந்து முரசறைந்து சாற்றினான். முசுகுந்தன் முன் கருதியபடி தியாகராஜப் பெருமானுக்கு மகோற்சவத்தை நடத்தி, மற்றைத் திருப்பதிகளிற்றாபித்த தியாகேசர்களுக்கும் அதுபோலத் திருவிழாவைச் செய்வித்து, வீரவாகு முதலிய வீரர்களோடும் பூவுலகத்தை ஆண்டிருந்தான். இந்திரன் பல வருஷங்களாகத் தியாகேசருடைய திருவிழாவைச்சேவித்து, தவஞ்செய்து புலையர் வடிவு நீங்கிப் பழைய வடிவத்தைப் பெற்று, மீண்டும் சுவர்க்கத்தையடைந்து முன் இழந்த செல்வங்களைப் பெற்று வீற்றிருந்தான்"

இங்ஙனம் இந்திரன் புலையவடிவு நீங்கி இழந்த தனது சுவர்க்கலோக வாழ்வைப் பெற்றது இத்திருவாரூர் மகோற்சவ தரிசனத்தானும் சேவையானுமாதலாலே இதன் விசிட்டத்தை நம்மனோர் உணர்ந்து தரிசிப்பாராயின் இம்மை மறுமைப் பயன்களை இனிது அடைவர். இவ்வுற்சவம் திருவாரூர், புள்ளிருக்குவேளூர், திருக்குடந்தைக் காரோணம் முதலிய திவ்வியக்ஷேத்திரங்கள் பலவற்றினும் நடத்தலின் ஏனைய இடங்களிற்சென்று தரிசிப்போரும் அப்பயனைப் பெறுவர்.

ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

---

# தலையன்பு - பதிவிரதா தர்மம்

முன்னொருகாலத்திலே தென் இந்தியாவில் பத்மநாபன் என்னுமோர் அரசனிருந்தான். இவன் கல்வி கேள்வியிலும் பராக்கிரமத்திலும் மிக்க பிரஸ்தாபமடைந்து குடிகளெல்லாம் போற்றித் துதிக்கும் வண்ணம் நீதிகெடாது செங்கோலோச்சிவந்தான். தர்மசிந்தையும் தெய்வ பக்தியும் பெரிதும் இவனிடத்து நிறைந்து விளங்கின. இவ்வேந்தன் சுகுணங்களுக்கேற்பவே சதாசார குணசீலியாகிய கமலாம்பாள் என்னுமொரு இராசகுமாரத்தி, இவனுக்கு உத்தம பத்தினியா யமைந்திருந்தாள். இம்மாதுசிரோமணி தன் நிலைமைக்கேற்ற சுந்தரமெல்லாம் குறைவறப் பெற்றிருந்தனள். ஆயின், அவள்மாட்டு விசேஷமாய் விளங்கிய இலட்சணமெது வென்றால், தனது நாயகனிடத்துக்கொண்ட பேரன்பேயாம். இவ்வனிதா இரத்தினம் தன் பத்தாவின் மீது பாராட்டிய காதலும் நேசமும்போல, இன்னொரு ஸ்திரீதனது நாயகனிடத்துக் கொண்டிருந்தாளெனக் கற்பிக்குஞ் சரித்திரம், எத்தேசத்திலாவது, எச்சாதியாரிடமாவது கிடைப்பதரிதென்பதை இக்கதையை வாசிக்கும் நண்பர்கள் எளிதில் உணர்ந்து கொள்வார்களென்பதற் கையமில்லை. அரசனுந்தேவியும் இரதியும் மதனும்போலவும், உடலும் உயிரும்போலவும், கனியும் அதன் சுவையும்போலவும் நெருங்கிய அந்நியோந்நியமாய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்தார்கள். இவர்கள் சம்பவம் இங்ஙனமாக.

அந்நாட்டிலே ஒருகிராமத்தில் ஒருகுடியானவன் சடுதியாய் நோய் வாய்ப்பட்டிறந்தான். அவன் இளமனைவி தன் நாயகனது பிரிவாற்றாது துக்கத்தினால் மனங்கரைந்து, சீவன்மேல் வெறுப்புற்று "எவ்விதமும் என்நாதன் சென்றவழி யானுஞ்செல்லுவேன்" எனத்தேர்ந்து, தீயில் விழுந்து உயிர்மாய்க்க நிர்ணயங்கொண்டனள். இதை நிறைவேற்ற ஒருநாளும் நியமிக்கப்பட்டது. தன் நிர்ணயத்தைப் பூர்த்திசெய்தல் மிக்க தீரச்செயலென மதித்து, அதை உலகோர்க் கறிவிக்கும்வண்ணம் அந்தஸ்திரீ அந்தஊரிலே பறைபறைவித்து விளம்பரஞ் செய்வித்தாள். குறிக்கப்பட்ட தினத்தன்று, ஒரு விசாலமான மைதானத்திலே பெரு நெருப்பொன்று மூட்டி, அது ஆகாயமளாவச் சுவாலைவீசி எரிந்து கொண்டிருக்க, அதைச்சுற்றி நாற்புறமும் நூற்றுக்கணக்கான சனங்கள் திரண்டு நிற்க, அம்மாது ஆற்றிலே ஸ்நானஞ்செய்து ஈரவஸ்திரத்துடன் தீயை முக்கால் வலம்வந்து உள்ளேகுதித்து உயிர் துறந்தனள்.

இவ்வரியசெயல் நடந்ததினம் பத்மநாபன் என்னும் அரசனும் அவன் பத்தினியும் அரண்மனையின் மேலுப்பரிகையில் உலாவி வரும்

பொழுது, தூரத்திலே சுவாலைபரப்பி எரிந்துகொண்டிருந்த பெரு வெளிச்சத்தையும், அதை முழுவதுஞ் சூழ்ந்து நின்ற சனத்திரளையுங் கண்ணுற்றனர். அரசன் அதன் காரணம் யாதென அறியவிருப்பங் கொண்டு, சிலதூதரை யழைத்துவினவ, அவர்கள் நடந்த சம்பவம் முழுவதையும் விளக்கிச் சொன்னார்கள். அரசன் அச்சரிதையைக் கேட்டு, அதிக ஆச்சரியமுற்று, "இத்தகைப்பெண்டிரும் இக்காலத் துளரோ" எனவியந்து, "இவளல்லவோ மனைவி இவள்காதலன்றோ உண்மைக்காதல், இவள் செய்கையே மாசற்ற பதிவிரதைகள் செய்கை" எனப்பலவாறு புகழுரை பகர்வானாயினான். இதைக் கேட்டு நின்ற கமலாம்பாள், தான் சிறிதேனும் வியப்புக்குறி காட்டாது, அரசனை அன்பாய்ப்பார்த்துச் சிறுகப்புன்னகை செய்தனள். அரசன் தன்மனைவியின் வேண்டாவெறுப்பான மனோநிலைமையையும், தன்னைப்பார்த்துச் சிறுநகைசெய்ததையும் உற்றுநோக்கினான். இவள் இங்ஙனஞ்செய்ததின் காரணம்யாதோவென ஐயுற்று, சித்தசமாதான மிழந்தவனாய், "எங் நியாயங்கொண்டு என்னைநோக்கிச் சிரித்தாயென வெகுண்ட பார்வையுடன் வினவினான். அதன்மேல் அவ்வனிதையர்திலகம் தன் பிராண நாயகனின் சினக்குறிகொண்ட முகத்தை வணக்கமாயும் பரிவாயும் பார்த்து, 'என்கோவே! தேவரீர் சகலசாஸ்திர புராணங்களிலும், மற்றுங் கலை ஞானங்களிலும் மிகுந்தநிபுணராயிருந்தும், கற்புடையாளின் தன்மையை யறியாது, இவ்ஸ்திரீயின் செயல் ஏதோ பிரமாண்டமானதென்று வியப்பதே எனக்குப் புன்னகையுண்டாக்கியது. இம்மாதின் செய்கை, இவள் தனது நாயகன்மேற் கொண்ட மெய்யன்பை யுணர்த்தாது, இவளிடத்து விளங்கும் புகழ்ச்சிப்பிரியத்தையே தெற்றெனக் காட்டி நிற்கின்றது. தன் உயிர்துணைவன் உலகவாழ்க்கையைத் துறந்தானெனக் கண்ணினாற்கண்டாவது, காதினாற்கேட்டாவது, அல்லது ஏதாவது நியாயங்கொண்டு மனதினால் யூகித்தாவது உணர்ந்த ஸ்திரீ, அதன்பின் ஒருக்ஷண நேரமாயினும் உயிர்தாங்கியிருப்பாளேல், அவள் மெய்யன்புடைய மனைவியாகமாட்டாள். இப்பெண்ணோ அதற்குமாறாகத் தன்நாயகன் இறந்துவிட்டதின் பின்னும் சிலநாட் சீவித்திருந்தாள். அதுவுமன்றி, தனதுபிரயத்தனம் யாதுமின்றி உயிர்தன்னிலே நீங்கப் பெற்றாளில்லை. வேண்டுமென்றே தீமூட்டி, உலகோர்புகழ்ந்து பேசி வியக்கும் வண்ணம் விளம்பரஞ் செய்வித்து, தன் முயற்சியினாலே பிராணத்தியாகஞ் செய்தவள் புகழ்ச்சிப்பிரியையேயன்றிப் பத்தாப் பிரியையல்லள்" எனச் செப்பி முடித்தாள். இவ்வரிய வாக்கியங்களைச் செவியுற்ற மன்னன் மிகுந்த வியப்படைந்து, மெய்யன்புடைய மனை

யாள் இவள் விளம்பியவண்ணஞ் செய்வளோவெனப் பெரிதும் ஐயுற்று, இவ்விதஞ்சொன்ன தன்மனைவி மெய்யன்புடையாளோ வெனப் பரீட்சிக்கச் சித்தங்கொண்டான்.

அதற்குவேண்டிய சூழ்ச்சிகள் செய்து, சிலநாட்கழிந்தபின் அரசன் தன் முதன்மந்திரியுடனும் ஒரு சிறு பரிவாரத்துடனும் வனவேட்டைக்குச் சென்றான். வனத்தையடைந்ததும், அரசன் தானும் மந்திரியும் தனியேசென்று புலிவேட்டை செய்துவருவதாகத் தெரிவித்து, பரிவாரத்தை ஓரிடத்திலே நிறுத்திவிட்டு, மந்திரியை யழைத்துக்கொண்டு அடர்ந்த காட்டினுள் நுழைந்தான். ஒருமறைவான இடத்தையணுகியவுடன், அரசன் மந்திரியைநோக்கித் தனக்கும் பத்தினிக்கு மிடையில் நடந்த சம்பாஷணையையும், தன் பத்தினியின் அன்பின் தன்மையைப் பரீட்சிக்கத் தான் கொண்டிருக்கும் எண்ணத்தையுந் தெரிவித்தான். அத்துடன் "என்னுடைய இரதத்திலே ஒருபெட்டி கொண்டு வந்திருக்கிறேன். அது காற்று உள்ளுக்குள் போகவும் வெளியே வரவுங்கூடியதாய்த் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அதன் உள்ளே யான் புகுந்திருக்கின்றேன். நீ அந்தப்பெட்டியை இரதத்தில்வைத்துப் பரிவாரங்கள் நிற்குமிடத்துக்கு மீண்டுசென்று, என்னைப் புலியடித்துக் கொன்றதாகவும் பெட்டியினுள்ளே என்பிரேதம் இருப்பதாகவும் அறிவித்து, இராஜதானிக்குமீண்டு, இச்செய்தியை அவ்விடத்தும் பரப்புவாயாக" எனக் கூறினன். மந்திரி அவ்வாறே சம்மதித்து, அரசனைப் பெட்டியிலடைத்துத் தேரிலெடுத்துக்கொண்டு பரிவாரம் நின்ற இடத்திற்குச்சென்று அரசன் புலியினாலடியுண்டு மாண்டானென்ற துக்க சமாசாரத்தை யுரைத்தலும், சேனைகளெல்லாம் துக்காகிரந்தர்களாகிப் பெருத்த தொனியுடன் கதறத் தொடங்கினர். வேட்டைக் கொடியை வீழ்த்திச் சாவுக்கொடி பறக்கவைத்தனர். இன்பவாத்தியங்களை நீக்கிச் சாவுவாத்திய முழக்கினர். இவ்வித துக்கச் சின்னங்களுடன் பட்டணத்தைநோக்கி விரைவாய்ச் சென்றனர். அரசன் வேட்டைக்குப் புறப்படும் பொழுது, அவனை அரிதிற்பிரிந்த கமலாம்பாள், அவன்வரவைத் தூரதிருஷ்டிக் கண்ணாடிவைத்து ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்திருந்தாள். தூரத்திலே பரிவாரம் வருவதைக் கண்ணுற்றாள். சாக்கொடிகளை நோக்கினாள், துக்கவாத்யம் ஒலிப்பதையுஞ் செவியுற்றாள். "இச்சின்னங்கள் யாருடைய மரணத்தைக் குறிக்கின்றனவோ" எனச்சிந்தையில் நினைத்தாள். அரசனையொழிந்த வேறு யார் மடிந்தாலும் இவ்விதடம்பமான துக்கசின்னங்கள் உபயோகிக்கப்படாவென அவள் மனதிற்பட்டது. "ஐயோ! என் பிராணநாதா", வென ஒருசத்தம் செய்தாள்.

இச்சத்தத்தைக்கேட்ட தாதியர்கள் விரைவிலோடி இராசபத்தினியைப் பார்த்தார்கள். அவள் நிலத்திலேசாய்ந்து மூர்ச்சையற்றுக் கிடந்தாள். தூக்கி நிமிர்த்தினர். சீவன் நீங்கப்பெற்றுச் சவமாயிருந்தாள். உடனே அரண்மனையெங்கும் இத்துக்க செய்தி பரவியது. சிலதாதியர்கள் மீண்டுவரும் பரிவாரங்களை நோக்கி ஓடி, மந்திரியைக்கண்டு இராஜ பத்தினி அகஸ்மாத்தா யிறந்ததைத் தெரிவித்தார்கள். இதைச்செவி யுற்ற மன்னன் பெட்டியிலிருந்து எழுந்து, சேனைகளெல்லாம் ஆச்சரிய முற்றுத் திகைக்க, தேரினின்றுங் குதித்து அரண்மனையை நோக்கி ஓடினன். கமலாம்பாள் இறந்திருந்த அறையை யணுகி, அவள்பிரேதத்தின்மேல் வீழ்ந்து புரண்டு கதறினன். தன் மதியீனத்தை நொந்தான். பதிவிரதையர்திலகமாகிய அவ்வனிதையின் குணாதிசயங்களைப் புகழ்ந்து பாடினன், இவ்வித மெய்யன்புடையாளை யிழந்து, இனி ஒருகண மேனும் உயிர்வாழேனெனத் தீர்மானங்கொண்டு, தன் மந்திரவாளை நிறுத்தி அதன் மேற்பாய்ந்து உயிர்விட்டான். (தமிழகம்)

---

## ஜீவ ஹிம்சை

### (சென்னை பப்ளிஸிடி பீரோவிலிருந்து)

நாம் அறிந்த வரையில், ஜீவப்பிராணிகளை அன்பாக நடத்த வேண்டுமென்னும் தர்மத்தை இந்தியா தேசந்தான் முதன் முதலாக உணர்ந்துகொண்டது. மனிதர்களுக்கு வைத்தியசாலை ஏற்படுத்தப் படவேண்டுமென்னும் விஷயத்தைக்கூட, இதர தேசங்கள் சுத்தமாகத் தெரிந்துகொண்டிராத பூர்வ காலத்திலே, அசோக மகாராஜன் மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் வைத்தியசாலைகள் ஏற்படுத்தி இருந்ததாக எழுத்து மூலமான ஆதாரங்களிருக்கின்றன. ஆனால், தற்காலத்தில், ஜீவப்பிராணிகளை காருண்யத்தோடு நடத்துவதில் பர்மா தேசமே சிறப்படைந்து விளங்குகிறதன்றி இந்தியாவல்ல. சென்னையிலிருந்து இரங்கோனுக்குப் போவோரெல்லார்க்கும், மிகுந்த திறமையோடு பாதுகாக்கப்படுவதால், செழிப்பும் சுறுசுறுப்பும் நிறைந்து காணப்படும் அவ்விடத்து எருதுகளுக்கும், குதிரை மட்டங்களுக்கும், சென்னையில் வேலை செய்யும் ஜெந்துக்களுக்குமுள்ள பெருத்த தாரதம்மியம் நன்றாகத் தெரியவரும். மனிதன் இரக்கமுள்ளவனாக இருந்தால், அவன் தனது மாடு அல்லது குதிரையை, ஜீவகாருண்யம் கருதியாகிலும் அன்பாகவே நடத்துவான். ஆனால், மனிதன் அவற்றை அன்பாகவே நடத்த வேண்டுமென்பதற்கு வேறு காரணங்களுமிருக்கின்றன. ஒரு

ஜீவப்பிராணியை, அதன் சக்திக்கு மிஞ்சி ஓட்டுதல், அதன் தேவைக்குக் குறைவாகத் தீனி போடுதல், அதைக் கொடுமையாக நடத்துதல், ஆகிய மூன்றும் கெட்ட முறைகளேயாகும். ஒரு ஜீவப்பிராணி எவ்வளவு நன்ருகக் காப்பாற்றப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது தனது ஆயுட் காலத்தில் வேலை செய்து, அதன் சொந்தக்காரனுக்கு அதிகரித்த பிரதிபலனைக் கொடுத்துவிடுகிறது. ஜீவப்பிராணிகளைக் கொடூரமாக நடத்துவது கேவலம் இழிகுணத்தைச் சேர்ந்ததாக இருப்பதன்றி, அது மனிதனுடைய ஒழுக்கத்தில் ஒரு பிணிபோல இருப்பதால், மனிதன் அதில் பழகப்பழக, சிறிதும் இரக்கமற்ற கொடியவனுக மாறிப்போவதுமன்றி, அவன் தனது சொந்தக் குழந்தைகளிடத்தில் கூட அன்பில்லாதவனுக மாறிவிடுவான். கொடுமையாக நடத்தப்படும் குழந்தைகளும் அவ்வாறே மாறி பிறருடைய துன்பங்களை உணராத கொடியோராக மாறிவிடுகின்றன. ஆகவே, இந்தத் தீங்கானது தலைமுறை தலைமுறையாகப் பெருகிக்கொண்டே வருகிறது. பெரியோரான ஆண் பெண்பாலார் ஜீவப்பிராணிகளை வதைப்பதைக் காணும் குழந்தைகளும் அம்மாதிரியே செய்யக் கற்றுக்கொள்வார்கள்.

ஜீவப்பிராணிகளைக் கொடூரமாக நடத்துவதால், மனிதனுடைய குணம் கொடியதாக மாறிப்போகிறது; காருண்யத்தோடு நடத்துவதால் குணம் மேம்பாடடைகிறது. ஆகவே, ஜீவஹிம்சையைத் தடுத்து தண்டிக்கவேண்டுமென்பதும், அன்பாக நடத்தத் தூண்டவேண்டுமென்பதும், எல்லாப் பிரஜைகளுக்கும் சம்பந்தமான பொது விஷயமாக இருக்கின்றன.

சென்னையில், ஜீவஹிம்சையைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு சங்கமானது, சென்ற நாற்பது வருஷகாலமாக, பல துறைகளில் வேலை செய்திருக்கிறது. எங்கேயாகிலும் ஜீவவதை நடந்தால், அங்கே, அதற்குத் தேவையான சாட்சிகளைச் சேகரம் செய்து குற்றவாளிகளை தண்டனைக்குக் கொண்டு வருவதன் பொருட்டு, ஷை சங்கமானது பல பிரதிநிதிகளை நியமித்திருக்கிறது. அசோக மகாராஜாவின் காலத்திலிருந்ததுபோல, இந்த சங்கம் ஒரு மிருக சாலையை ஸ்தாபித்திருக்கிறது. ஷை சாலையில், வேலை செய்ய சக்தியற்ற கிழ மிருகங்கள், அவற்றின் சொந்தக்காரருக்கு எவ்வித பணச் செலவுமில்லாமல், வைத்து போஷிக்கப்பட்டு வருகின்றன. அதோடு, ஒரு வைத்தியசாலையும், நாய்களை ஸம்ரக்ஷிப்பதற்காக ஒரு விடுதியும் இருக்கின்றன. நோய் கொண்டிருக்கும் ஜீவப்பிராணிகளுக்கு இவ்விடங்களில் சிகிச்சை செய்யப்படுகிறது.

அப்படி இருந்தும், தென்னிந்தியாவில் பலவகையான ஜீவஹிம்சைகள், சாதாரணமாக நடந்து வருகின்றன. அவைகளில் சில, பட்டணங்களிலும், வேறு சில, நாட்டுப்புறங்களிலும் நடைபெறுகின்றன. வேலை செய்யும் எருதுகளையும் குதிரைகளையும் வதைப்பதே எல்லாவற்றிலும், சர்வ சாதாரணமான ஹிம்சையாக இருக்கிறது. சக்திக்கு மிஞ்சி ஓட்டுதல், குறைவான தீனி போடுதல், புண், காயம், வீக்கம், முதலியவை இருப்பதால், வேலை செய்ய முடியாதிருக்கும் நிலைமையில் வேலை வாங்குதல், அபாரமான சுமையை வைத்தல் முதலிய பலவகையான ஹிம்சைகள் உண்டு. மகா கொடியதான இன்னொரு ஹிம்சை எதுவென்றால், எருதுகளின் வாலைப்பிடித்து முறுக்கி, அவைகளுக்கு அதிகமான நோவை யுண்டாக்குவது. வேலை செய்யும் எருதுகளில் அநேகமாக எல்லாவற்றின் வால்களிலும் மணிக்கட்டுகள் பிசகியே காணப்படுகின்றன.

இன்னொரு கொடிய வழக்கமென்னவென்றால், கூர்மையான தார்க் குச்சிகளால் குத்தி ஓட்டுவது. மேல் தோல் கிழிப்பட்டுப்போனால், அவ்விடத்தில், விஷத்தன்மையுள்ள தூசி படிந்து உறுத்தி கடைசியில் இரணமுண்டாக்கிவிடுகிறது. எருதுகளின் மேல் சூடு போட்டால், அவைகளுக்கு எவ்வித வியாதியும் உண்டாகாது என்ற துர்ப்பாக்கியமான ஒரு மூட நம்பிக்கை இருந்துவருகிறது. அம்மாதிரி எண்ணுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. சூடு போடுவதால், எருதுக்கு அநாவசியமான நோவுண்டாவதன்றி, அதன் தோல் பதனிடப்பட்டால், குறைந்த விலைக்கே போகிறது. காயடிப்பதென்னும் இன்னொரு வழக்கமுமிருந்து வருகிறது. அதனால் இளம்பிராயமுள்ள காளைகள் மகா பயங்கரமான சித்திரவதை செய்யப்படுகின்றன. அவற்றின் பீஜங்கள் இரண்டு கற்களுக்கிடையில் வைத்து மசித்துவிடப்படுகின்றன. அந்த ஹிம்சையினால், அந்தப் பிராணி ஸ்மரணை தப்பி, அப்படியே வீழ்ந்து போய், சில நாட்கள் வரையில் வேலை செய்வதற்கு அருகமற்றதாக ஆய்விடுகின்றது. இது ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் கேள்விப்படாத முறையாதலால், அவசியமானதல்ல. இந்த விஷயத்தில் கிருஷிக இலாகா (Agricultural Department) வினால் வெளியிடப்பட்டுள்ள "விதை யடித்தலும் பீஜமர்த்தனமும்" என்ற துண்டுப் பத்திரிகையை, கால் நடைகளின் சொந்தக்காரர்கள் படிக்க வேண்டும்.

கடல் மார்க்கமாக ஜீவப்பிராணிகள் ஏற்றுமதி செய்யப்படும் போதும்; ஆடுமாடுகள் அடிபடும் இடங்களிலும், அநாவசியமான பெருத்த ஹிம்சை செய்யப் படுகிறது. இந்த விஷயங்களில், சென்னை

யிலுள்ள சங்கமானது பிரத்தியேகமான பிரயாசை எடுத்துக்கொண்டு வருகிறது. இன்னொரு கொடிய வழக்கமென்னவென்றால், உயிரோடிருக்கும் கோழிகளையும், வாத்துகளையும் கால்களைக் கட்டித், தலை கீழாகத் தொங்கவிட்டு, சந்தைக்குக் கொண்டுபோகிறது. எவரேனும் சென்னையில் வழியோடு போவாராயின், நாலா பக்கங்களிலும் காணப்படும் ஜீவஹிம்சைகள் அவரை மிகுந்த விசனத்துள்ளாக்கும். அதிலும், வாடகை வண்டிகளில் ஏறிச் செல்வதோ இன்னமும் கேவலமாக இருக்கும். ஏனென்றால், குதிரை, குறைவான தீனி தின்று அளவுக்கு மிஞ்சி இளைத்திருப்பதன்றி, ஓட்டுகிற வண்டிக்காரனே, அதை ஓயாது அடிப்பதையும், கடிவாள வாரைப்பிடித்துச் சுண்டிச்சுண்டி இழுப்பதையும் தவிர தனது கடமைகள் என்னவென்பதை அறியாதவனாக இருக்கிறான்.

இவைகளுக்கெல்லாம் பரிகாரம் பொதுஜன அபிப்பிராயத்திலே தான் அடங்கியிருக்கிறது. சென்னையிலுள்ள சங்கத்திற்குப் பொது ஜனங்களின் ஆதரவும் பணவுதவியும் இன்னமும் அதிகமாக ஏற்பட வேண்டும். இதுவரையில் செய்ததைவிட, நாம் இனிமேல், இந்த விஷயங்களில் அதிகமாகத் தலையிட்டு, எங்கேயாகிலும் ஜீவஹிம்சை நடப்பதைக் கண்டால், அங்கங்கே கண்டிக்க வேண்டும். ஜீவகாருண்யம் இருப்பதன் அவசியத்தைப் பற்றி, பள்ளிக்கூடங்களில், இன்னம் அதிக பலன் தரும்படி போதிக்க வேண்டும். அசோக மகாராஜாவின் பூமியான இந்தத் தேசத்தில் இப்படிப்பட்ட களங்கம் இருப்பதை ஒழிக்க வேண்டுமென்னும் உறுதியை நாம் ஒவ்வொரு வழியிலும் காட்டவேண்டும்.

---

## புத்தக வரவு

இதனடியிற் கண்ட புத்தகங்கள் எமக்குக் கிடைத்தன. இவைகளை எமது பார்வைக்கனுப்பிய அன்பர்களுக்கு நன்றி பாராட்டி வந்தனமளிக்கின்றோம். (ப - ர்.)

**1.** நாயன்மார்—இது தேசபக்த சிகாமணியாகிய ஸ்ரீ திரு.வி. கலியாணசுந்தர முதலியாரவர்களால் எழுதப்பெற்று, காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதில் நாயன்மார்கள் செய்துள்ள அரும்பெருந் தொண்டுகளும், அவர்கள் மாட்டு விளங்கிய உண்மை, உறுதி, அஞ்சாமை முதலிய உயரிய குணங்களும், நம் தேசம் முன்னேற்றமடைய அத்தகைபோர் பலர் அவ

தாரம் செய்தல்வேண்டுமென்பதும் மிகவும் நன்ருக எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

2. திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தின் முதலாவது திருமலைச் சருக்கத்தில் சில ஆராய்ச்சி—இந்நூல் திருச்சிராப்பள்ளியிலிருக்கும் Retired Sub Magistrate ஸ்ரீ திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்களால் எழுதி அச்சிடப் பெற்றுள்ளது. இது ஷெ திருமலைச் சருக்க முதலிய சில பகுதிகள் சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பெற்றன வல்லவெனக் கூறுவாரை மறுத்து, அவை அவர் பாடியனவே யென்று விளக்குகின்றது.

3. யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரின் சரித்திரச் சுருக்கம்—இது யாழ்ப்பாணம் உடுவில் வசிக்கும் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்களால் எழுதப்பெற்று, கண்டரமாணிக்கம் விவேகானந்த சபையாரால் அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூலில் குமாரசாமிப் புலவரின் இலக்கிய இலக்கண வன்மைகளும், கீர்த்தியும், அவரியற்றிய நூல்களும், அவரால் தமிழுலகம் அடைந்த நன்மைகள் முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன.

---

## இராசவாசல் முதலியார்

## ஸ்ரீமான் - ச. சபாரத்தினம் அவர்களின் தேகவியோகம்

இவர் தமிழ்பாஷாபிமானமும், தேசாபிமானமும், சைவ சமயாபிமானமும் நிரம்பப் பெற்றவர். இலங்கை அரசாங்கத்தில் மிகவும் கௌரவமான உத்தியோகங்களை மிகத்திறம்பட நடத்தினவர். பிரபஞ்ச விசாரம், Essentials of Hinduism முதலிய நூல்களை இயற்றியவர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் அக்கிராசனம் வகித்தவர். அரிய வியாசங்களால் பல பத்திரிகைகளைச் சிறப்பித்தவர். இவர் இம்மாதம் தமது 67-வது வயதில் சிவபதமடைந்தனர்.

---

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக் கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வரு பவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்பு வோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

**இ. கண்ணப்ப முதலியார்,**
நெ. 43, பாளையப்பன் வீதி,
சென்னை.

---

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டியிருப்பதனாலும், இத்தமிழ் நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயாயிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபிவிருத்திக்கு இன்றியமையாத கருவியாயிருப்பதனாலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி புதன் சனிக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினாங் சிங்கப்பூர் மலாகா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5. 50 மூன்று மாதத்திற்கு ரிங்கி 3. 00. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்து ரோட்,
கோலாலம்பூர்.


---

# திருவூறல் ஆலய தரும பரிபாலன சபை.

இச்சபை தேவாரம் பெற்றிருப்பதும், தக்கோலம் என வழங்கப்படுவதுமாகிய திருவூறலில் ஸ்ரீமத் சொக்கலிங்க சுவாமிகளால் தாபிக்கப் பெற்றுள்ளது. இதில் தக்கோலத் தலவாசிகளும் பிறருமாகப் பலர் கூடி சிவபுராண படனமும் தேவார பாராயணமும் செய்கிறார்கள்.

இத்தலத்தில் தொன்று தொட்டுப் பாதாள கங்கை திருநந்திதேவர் திருவாயினிடமாக வெளிப்போந்து சிவபிரானை வலம் வருவதாகிய அற்புதம் இன்றும் காணப்படுகிறது. இத்தகைய அருமையான சிவதலத்தில் ஆலயம் தரிசிக்கச் செல்வோர் தலையில் இடிந்து விழக் கூடிய அவ்வளவு கிலமாயிருந்தும், இதைச் சீர்திருத்தாரணம் செய்ய இதுகாறும் யாருக்கும் புண்ணியம் வாய்க்காமலிருப்பது அதிசயமே. சிற்சில ஆலயங்களுக்கே ஏராளமாகப் பணச் செலவு செய்து இடைவிடாமல் திருப்பணி நடத்தும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் இதை இதுகாறும் கவனியாதிருப்பது வருந்தத்தக்கதாம்.

---


Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.